தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள்

## 2022-2023

## வளர்தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

TEDC

1. கல்லறைகள், கல்மேசைகள் போன்றவற்றை அமைப்பதற்குப் பெருங்கற்களைப் பயன்படுத்திய காலம்

அ) முதற்கற்காலம் ☐ ஆ) இடைக்கற்காலம் ☐

இ) கடைக்கற்காலம் ☐ ஈ ) தற்காலம் ☐

2. திணை, பால், எண், இடம் என்பவற்றைக் காட்டுவது

அ) பகுதி ☐ ஆ) இடைநிலை ☐

இ) விகுதி ☐ ஈ ) சாரியை ☐

3. சின்னஞ்சிறிய வண்ணப் பறவைகள் வானில் சிறகடித்துப் பறந்தன. இதில் சின்னஞ்சிறிய என்பது

அ) அடுக்கிடுக்குத்தொடர் ☐ ஆ) அடுக்குத்தொடர் ☐

இ) இணைமொழி ☐ ஈ ) இரட்டைக்கிளவி ☐

4. ஆழ்கடலைத் தயிரெனக் கடையச் சென்றவர்கள்

அ) உழவர்கள் ☐ ஆ) குயவர்கள் ☐

இ) இடையர்கள் ☐ ஈ ) மீனவர்கள் ☐

5. சேவியர் என்ற இயற்பெயரைக் கொண்டவர்

அ) விபுலாநந்தஅடிகள் ☐ ஆ) தனிநாயகம்அடிகள் ☐

இ) மறைமலைஅடிகள் ☐ ஈ ) இளங்கோ அடிகள் ☐

TEDC

6. தித்திப்பு என்பது

அ) இனிப்பு ☐ ஆ) புளிப்பு ☐

இ) உறைப்பு ☐ ஈ ) கசப்பு ☐

7. செந்நாப்புலவர்கள் செந்தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தனர். இச் சொல்லியத்தில் வந்துள்ள பயனிலை அடைமொழி

அ) செந்நா ☐ ஆ) போற்றி ☐

இ) செந்தமிழ் ☐ ஈ) வளர்த்தனர் ☐

8. பண்டைத்தமிழர் ―――――― உயிரை விட உயர்ந்ததாகக் கருதினர்.

அ) பொன்னையும் பொருளையும் ☐

ஆ) உணவையும் உடையையும் ☐

இ) மானத்தையும் வீரத்தையும் ☐

ஈ) பணத்தையும் புகழையும் ☐

TEDC

9. மகாவம்சம் எழுதப்பட்ட நூற்றாண்டு

அ) கி.பி 5 ☐ ஆ) கி.மு 5 ☐

இ) கி.பி 4 ☐ ஈ) கி.மு 7 ☐

10. போர்க்களத்தில் வீழ்ந்துள்ள வீரர்களின் உடல்களுக்கு உவமையாகக் கூறப்பட்டவை

அ) கவிழ்ந்துவிட்டபடகுகள் ☐ ஆ) மிதக்கின்ற துடுப்புகள் ☐

இ) நெடுமரங்கள் ☐ ஈ) குமுதமலர்மொட்டுகள் ☐

11. பகுசொல்

அ) கல் ☐ ஆ) சிலை ☐

இ) கடல் ☐ ஈ) கூத்தர் ☐

TEDC

12. கண்ணாடி என்ற சொல்லைப் பிரித்தெழுதினால்

அ) கன் + ஆடி ☐ ஆ) கண் + ஆடி ☐

இ) கண் + நாடி ☐ ஈ) காண் + ஆடி ☐

13. தனிநாயகம்அடிகள் இறுதியாக வெளியிட்ட நூல்

அ) யாழ்நூல் ☐ ஆ) சதுரகராதி ☐

இ) தமிழ்மறைவிருந்து ☐ ஈ) தமிழியல்இதழ் ☐

14. 'க்' என்ற வல்லின மெய்யெழுத்தின் இனவெழுத்து

அ) ச் ☐ ஆ) ஞ் ☐

இ) ங் ☐ ஈ) த் ☐

15. தன் குழந்தையின் மழலைப் பேச்சைக் கேட்ட தாய் கழிபேருவகை கொண்டாள். இதில் வந்துள்ள உரிச்சொல்

அ) மழலை ☐ ஆ) உவகை ☐

இ) கேட்ட ☐ ஈ) கழி ☐

16. இயக்கர், நாகரின் வழித்தோன்றல்கள்

அ) சிங்களவர் ☐ ஆ) தமிழர் ☐

இ) ஆரியர் ☐ ஈ) பறங்கியர் ☐

17. துட்டகெமுனு போர் அறத்திற்கு மாறாகச் சூழ்ச்சி செய்து எல்லாளனைக் கொன்றான். இதில் செய்து என்பதன் நிகழ்காலப் பெயரெச்சம்

அ) செய்த ☐ ஆ) செய்யும் ☐

இ) செய் ☐ ஈ) செய்கின்ற ☐

18. விபுலாநந்த அடிகள் தமிழுக்கு ____________ ஆற்றினார்.

அ) அரும்பனி ☐ ஆ) அறும்பனி ☐

இ) அரும்பணி ☐ ஈ) அறும்பணி ☐

TEDC

19. அநுராதபுர மாவட்டத்தில் தொல்குடித் தமிழரது ஈமப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) பொம்பரிப்பு ☐ ஆ) மாந்தை ☐
இ) சேருவில ☐ ஈ) குருகில்கின்ன ☐

20. மெய்முன்உயிர் புணர்தலுக்கு எடுத்துக்காட்டு

அ) பலாக்கனி ☐ ஆ) கண்ணெரிவு ☐
இ) கன்மனம் ☐ ஈ) வாட்படை ☐

21. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி

அ) எலு ☐ ஆ) சிங்களம் ☐
இ) தமிழ் ☐ ஈ) பாளி ☐

22. தேன்மொழி கனகாம்பரம் சூடி வாணிவிழாவுக்குச் சென்றாள். இதில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்

அ) சினையாகுபெயர் ☐ ஆ) காலவாகுபெயர் ☐
இ) குணவாகுபெயர் ☐ ஈ) பொருளாகுபெயர் ☐

23. ஐயந்திரிபற என்பதன் பொருள்

அ) முற்றும்கற்றல் ☐ ஆ) பட்டறிவு ☐
இ) முற்றுந்தெளிவாக ☐ ஈ) தெளிவின்றிக் கற்றல் ☐

24. தமிழீழத்தில் எம் உறவுகள் வாழ்கின்றனர். இங்கு இல் என்பது

அ) ஐந்தாம்வேற்றுமைஉருபு ☐ ஆ) ஆறாம்வேற்றுமைஉருபு ☐
இ) மூன்றாம்வேற்றுமைஉருபு ☐ ஈ) ஏழாம்வேற்றுமைஉருபு ☐

25. உறுதுணையாக நின்று உதவுதல் என்ற கருத்தை விளக்கும் மரபுத்தொடர்

அ) தோள்கொடுத்தல் ☐ ஆ) வாய்காட்டல் ☐

இ) ஆழம்பார்த்தல் ☐ ஈ) அள்ளிஇறைத்தல் ☐

26. செங்குட்டுவன் இமயத்தில் எடுத்த கல்லைக் கொண்டு வந்து ________ ச் சிலை வடித்தான்.

அ) மாதவிக்கு ☐ ஆ) கண்ணகிக்கு ☐

இ) கோப்பெருந்தேவிக்கு ☐ ஈ) மணிமேகலைக்கு ☐

27. நெல்லின் இளையது நாற்று. அதுபோல பனையின் இளையது

அ) குட்டி ☐ ஆ) பிள்ளை ☐

இ) வடலி ☐ ஈ) கன்று ☐

28. பௌத்தர் அல்லாதவனை மாந்தனாக மதிக்கக் கூடாது எனக் கூறும் நூல்

அ) மணிமேகலை ☐ ஆ) வளையாபதி ☐

இ) குண்டலகேசி ☐ ஈ) மகாவம்சம் ☐

29. ‘‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’’ எனப் பாடியவர்

அ) பாரதியார் ☐ ஆ) கனகசுப்புரத்தினம் ☐

இ) சாலைஇளந்திரையன் ☐ ஈ) திருத்தக்கதேவர் ☐

30. சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப்பொருளை உணர்த்தும் வினா எழுத்து

அ) ஏ ☐ ஆ) யா ☐

இ) ஆ ☐ ஈ) ஓ ☐

புள்ளிகள் 30

TEDC

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

விசயன் இலங்கையில் வந்திறங்கிய காலத்தில், இலங்கையின் வடபகுதியில் நாகரும் தென்பகுதியில் இயக்கரும் ஆட்சி புரிந்தனர். அன்று இயக்கர்குல அரசியான குவேனி ஆட்சியிலிருந்தாள். இதற்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை நாவலந்தீவின் ஒரு பகுதியாகவே இருந்தது. இன்றைய இந்தியா அன்று நாவலந்தீவு என அழைக்கப்பட்டது. குமரிக்கண்டத்தை ஆண்ட தமிழர் இலங்கையிலேயே தங்களது தலைநகரத்தை அமைத்து இருந்தனர். குமரிக்கண்டத்தைக் கடல் கொண்டபோது இலங்கை நாவலந்தீவிலிருந்து உடைந்து விலகித் தனித்தீவானது. அது தனித் தீவாகிய போதிலும் தமிழகத்தை ஆண்ட வேந்தர்களின் தலைநகராகவே இருந்தது. ஆரியச் சூழ்ச்சியால் கொல்லப்பட்ட இராவணன் என்னும் பேரரசன் இலங்கையில் இருந்துதான் தமிழகம் முழுவதையும் ஆண்டான். எனவே, குமரிக்கண்ட காலம் முதல் இன்றுவரை தமிழர் தொடர்ந்து வாழ்கின்ற மண் இலங்கை. ஆனால், தமிழர் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் விசயன் இலங்கைக்கு வந்த போது அங்கு மாந்தர்கள் வாழவில்லை என்றும் காட்டுமிராண்டிகளான மாயமாந்தர்கள் வாழ்ந்தனர் என்றும் பொய்யான செய்திகளை மகாவம்சம் கூறுகின்றது.

1. விசயன் இலங்கைக்கு வந்த போது அங்கு மாந்தர்கள் வாழவில்லை என்ற பொய்யான செய்தியைக் கூறும் நூல் எது?

   ______________________________

2. ஆரியச் சூழ்ச்சியால் கொல்லப்பட்ட பேரரசன் யார்?

   ______________________________

3. குமரிக்கண்டத்தை ஆண்ட தமிழர் தங்களது தலைநகரத்தை எங்கே அமைத்திருந்தனர்?

   ______________________________

4. இயக்கர்குல அரசியின் பெயர் என்ன?

   ______________________________

5. இன்றைய இந்தியாவின் அன்றைய பெயர் என்ன?

   ______________________________

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இலங்கைத்தீவின் பழைய கற்கால மக்களை ஒத்த நாகரிகமுள்ள மக்கள் வேறு எங்கே வாழ்ந்துள்ளனர்?

____________________

2. நாட்டிய மங்கையர் போல தலைசாய்த்து ஆடிய நெற்பயிர்களை அழித்தவை எவை?

____________________

3. மகாவம்சம் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன?

____________________

____________________

4. தனிநாயகம் அடிகள் ஆங்கிலச் சிற்றிதழ்களை வெளியிட்டதன் கரணியம் என்ன?

____________________

5. "போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!" என்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

____________________

6. பெருங்கற்காலத்தில் எமது முன்னோர் இறந்தோரை எவ்வாறு அடக்கம் செய்தனர்?

____________________

7. தமிழாராய்ச்சி மன்றத்தைத் தோற்றுவித்தவர் யார்?

____________________

புள்ளிகள் 10

TEDC

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

# புதியதொரு வீடு

| | | | | |
|---|---|---|---|---|
| வெறுவான | தரை | இவள் | கடல் | கரகங்கள் |

சிறுநண்டு மணல்மீது படமொன்று கீறும்
சிலவேளை இதைவந்து ____________ கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல்மீது ____________ கொண்ட பயம் ஒன்று காணும்

____________ வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல்நின்று ____________ ஆடும்
நெறிமாறு படநூறு சுழிவந்து சூழும்
நிலையான ____________ நீரில் இலைபோல் ஈடாடும்

புள்ளிகள் 05

TEDC

**5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

காலைக்கதிரவனின் செங்கதிர் பட்டு நாணித் தலை குனிந்து நிற்கும் செந்நெற்கதிர்கள். அவை தங்க நகைகள் அணிந்தது போல கதிரவனின் ஒளியில் பளபளத்துக் கொண்டே நிற்கின்றன. மண்வெட்டியுடன் வயல் வரப்பிலே வந்த உழவன் நெற்கதிர்களைப் பார்த்து மனமகிழ்ந்து அவற்றைக் கொத்தாகக் கிள்ளியெடுத்து முகர்ந்து பார்த்தான். நெற்கதிர்களின் மணத்திலே தன்னை மறந்தான். பென்னம்பெரிய வயற்பரப்பைச்சுற்றி, கன்னங்கரிய பனங்கூடல் ஒருபுறம். மறுபுறம் மரச்சோலை. மரச்சோலையிலே பலாக்கனிகளும் விளாங்காய்களும் இறைந்து கிடக்கின்றன.

1. உயிர்முன்மெய் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

2. அடுக்கிடுக்குத்தொடர் இரண்டைத் தருக.

______________________________

3. சினைப்பெயர் ஒன்று எழுதுக.

______________________________

4. காரணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

5. பிரித்தெழுதுக.
   செங்கதிர் ______________________________

TEDC

TEDC

புள்ளிகள் 10

**ஆ) 1. தரப்பட்டுள்ள சொல்லியங்களைக் கொண்டு நிரற்கூட்டை நிரப்புக.**

1. அழகான சிறுமி தாயகப்பாடலை இனிமையாகப் பாடினாள்.

2. பச்சைக் கிளி கனிந்த பழத்தை மெல்லக் கொத்தியது.

TEDC

| **எழுவாய் அடைமொழி** | **செயப்படுபொருள்** | **பயனிலை அடைமொழி** |
|---|---|---|
| | | |
| | | |

புள்ளிகள் 03

**2. பின்வரும் சொற்களின் இடைநிலைகளைத் தருக.**

கட்டினான் ____________________

நடிக்கின்றார் ____________________

வருவாள் ____________________

குரைத்தன ____________________

புள்ளிகள் 02

TEDC

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

வாளை  கரி  குரைத்து  வாழை  கறி  குறைத்து

அப்பா தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தார். அங்கு முற்றிய ____________ க் குலை ஒன்றைக் கண்டார். வெட்டிய குலையை அங்காடிக்குக் கொண்டு சென்று விற்றார். அங்கு பல வகையான மீன்கள் விற்கப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். அவற்றுள் தனக்கு விருப்பமான ____________ மீன்களை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார். அம்மா சுறுசுறுப்பாக வீட்டைப் பெருக்கியபின் சமையலறைக்குள் சென்று சமைப்பதற்காக அடுப்பிலிருந்த சாம்பலையும் ____________ த் துண்டுகளையும் அகற்றினார். பின்னர் அம்மா சுவையான மீன் ____________ சமைத்தார். எல்லோரும் சேர்ந்து உணவு உண்ணும் போது நாய் வாசலில் ____________ க் கொண்டு இருந்தது. உடனே அப்பா எழுந்து சென்று பார்த்தார்.

TEDC

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நாம் உயிர் வாழ்வதற்கு மரங்கள் உதவுகின்றன. நாம் அவற்றிலிருந்து உணவைப் பெறுகின்றோம். அதுமட்டுமன்றி பறவைகள் மற்றும் விலங்குகளின் இருப்பிடமாகவும் மரங்கள் அமைகின்றன. அத்துடன் காற்று வீசவும் மழை பெய்யவும் மரங்கள் உதவுகின்றன. ஆனால் மாந்தன் தனது தேவைகளுக்காக மரங்களை வெட்டுகின்றான். எனவே நாம் மரங்களை வெட்டாது இயற்கையைக் காப்போம்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

TEDC

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

✸ தீயன செய்தோர் துன்புறுவர்.

✸ ஒன்று இல்லாத போதுதான் அதன் அருமை தெரியும்.

✸ போலிப்பெருமை காட்டுதல்.

✸ ஒற்றுமை நலன் விளைவிக்கும்.

✸ தன்னிடம் இருப்பதை தானறியாமை.

TEDC

1. கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலையாதே.

_______________________________________________

2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

_______________________________________________

3. அடாது செய்தவர் படாது படுவர்.

_______________________________________________

4. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.

_______________________________________________

5. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.

_______________________________________________

TEDC

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ இலங்கையின் முதற்குடிகள்
- ✸ தாயின் தாலாட்டு
- ✸ எனது தாய்நாடு
- ✸ இயற்கை அழிவுகளும் மக்களும்

புள்ளிகள் 15